பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

02 07 2025 **WEDNESDAY**

**12.40 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. கானா, அர்ஜென்டினா, பிரேசில் உள்ளிட்ட நாடுகளுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று தமது பயணத்தை தொடங்கியுள்ளார்.

2. பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு காரணமானவர்கள் சர்வதேச சட்டத்தின்படி விரைந்து தண்டிக்கப்பட வேண்டும் என்று குவாட் அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

3. அமெரிக்க பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு **Pete Hegseth**-ஐ வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் சந்தித்து, இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து விவாதித்தார்.

4. அமர்நாத் புனித யாத்திரையை முதல்கட்டமாக நாளை தொடங்கவுள்ள ஐந்தாயிரத்து 892 யாத்ரீகர்களை ஜம்மு காஷ்மீர் துணை நிலை ஆளுநர் திரு மனோஜ் சின்ஹா இன்று வழியனுப்பி வைத்தார்.

5. இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி இன்று தொடங்குகிறது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<>>>>>

**Ghana,** அர்ஜென்டினா, பிரேசில், நமீபியா, **Trinidad - Tobago** நாடுகளுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று தமது பயணத்தை தொடங்கியுள்ளார்.

புதுதில்லியில் இருந்து புறப்படும்முன், அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், முதல்கட்டமாக தாம் தெற்கத்திய நாடான கானா செல்லவிருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

ஆப்பிரிக்க நாடுகளின் பொருளாதார ஒத்துழைப்புக்கு தமது கானா பயணம் பெரிதும் உதவிடும் என்று அவர் கூறியுள்ளார்.

எரிசக்தி முதலீடு, சுகாதாரம், பாதுகாப்பு, வர்த்தகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான முயற்சிகளை தமது பயணத்தின்போது மேற்கொள்ள இருப்பதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

கானா நாடாளுமன்றத்திலும் திரு நரேந்திர மோடி உரையாற்றவுள்ளார்.

நாளை **Trinidad - Tobago** செல்ல இருப்பதாக தெரிவித்துள்ள பிரதமர், அங்குள்ள மக்களுக்கும், இந்திய மக்களுக்கும் இடையே நீண்டகாலமாக இருந்துவரும் நல்லுறவு வலுவானது என்று குறிப்பிட்டுள்ளார்.

**Trinidad** அதிபர் **Christine Carla** -வையும், பிரதமர் திருமதி **Kamla Persad** -யும் இந்த பயணத்தின்போது சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து பேச இருப்பதாக அவர் கூறியுள்ளார்.

இருநாடுகளுக்கும் இடையிலான நீண்டகால உறவுகளை புதுப்பிக்கும் வகையில் தமது **Trinidad-Tobago** பயணம் அமையும் என்று பிரதமர் தெரிவித்துள்ளார்.

ஜி-20 அமைப்பில் உறுப்பு நாடாக உள்ள அர்ஜென்டினா, லத்தீன் அமெரிக்க நாடுகளின் மிக நெருங்கிய ஒத்துழைப்பு கொண்ட நாடாக விளங்குகிறது என்றும் கூறியுள்ளார்.

அர்ஜென்டினா அதிபர் **Javier Mile-**யும் சந்தித்து இருதரப்பு ஒத்துழைப்பு, வேளாண்மை, எரிசக்தி, வர்த்தகம், சுற்றுலா ஆகிய துறைகளில் உறவுகளை மேம்படுத்துவது குறித்து விவாதிக்க இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

வரும் 6, 7 தேதிகளில் பிரேசில் நாட்டின் ரியோடிஜெனிரோவில் நடைபெறும பிரிக்ஸ் உச்சிமாநாட்டில் தாம் கலந்துகொள்ள இருப்பதாகவும் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

<<<<<>>>>>

பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு காரணமானவர்கள், நிதியுதவி அளித்தவர்கள் மற்றும் துணையாக இருந்தவர்களை தாமதமின்றி நீதியின்முன் நிறுத்தி, தண்டனை பெற்றுத்தர வேண்டும் என குவாட் அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

வாஷிங்டனில் நடைபெற்றுவரும் குவாட் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் மாநாட்டில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில், ஐ நா உறுப்பு நாடுகள் குவாட் அமைப்பு தீர்மானத்திற்கு முழு ஒத்துழைப்பு தர வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு குவாட் உறுப்பு நாடுகள் அனைத்தும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

தீவிரவாதம் எந்த வடிவில் இருந்தாலும் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும், எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை கடுமையாக கண்டிப்பதாகவும் உறுப்பு நாடுகள் அந்த கூட்டறிக்கையில் தெரிவித்துள்ளன.

சர்வதேச சட்டத்தின்படி தீவிரவாதத்தை ஊக்குவிப்போருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும், ஐ நா பாதுகாப்பு சபையின் தீர்மானங்களின்படி, தவறிழைக்கும் நாடுகள் மீது நடவடிக்கை எடுக்க வேணடும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது..

இந்தோ – பசிபிக் மண்டலத்தில் பொருளாதார பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்பை வலுப்படுத்த வேண்டும் என்றும் குவாட் அமைப்பு தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்த மண்டலத்தில் சரக்கு போக்குவரத்தை ஒருங்கிணைக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

முன்னதாக, குவாட் உச்சிமாநாட்டையொட்டி, வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், அமெரிக்காவின் பாதுகாப்புத்துறை அமைச்சர் **Pete Hegseth**-ஐ சந்தித்து பேசியுள்ளார்.

இந்தியா – அமெரிக்கா இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து இரு தலைவர்களும் விரிவாக விவாதித்தனர்.

<<<<<>>>>>

கோவிட் பாதிப்பின்போது பொதுமக்களுக்கு செலுத்தப்பட்ட தடுப்பூசிகள் அனைத்தும் பாதுகாப்பானவை என்று இந்திய மருத்துவ கவுன்சிலும், எயிம்ஸ் மருத்துவக்கல்விக் கழகமும் உறுதி செய்துள்ளன.

கோவிட் தொற்றுக்கு பிறகு முதியவர்கள் அதிக அளவில் உயிரிழந்ததாக கூறப்பட்ட புகார் குறித்து ஆய்வு செய்த மருத்துவக்குழுவினர், அந்த உயிரிழப்புகளுக்கு கோவிட் தொற்று காரணம் அல்ல என்று உறுதி செய்துள்ளது.

இருதய நோய் பிரச்சினை, வயிறு சம்பந்தமான உபாதைகள் ஆகியவற்றால் மட்டுமே இந்த உயிரிழப்புகள் ஏற்பட்டதாக ஆய்வின் முடிவுகள் தெரிவிக்கிறது.

18 வயதுக்கும், 45 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் கோவிட் தொற்றுக்கு பிறகு உயிரிழந்தது குறித்து விரிவான அளவில் ஆய்வு செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

புதிய குற்றவியல் சட்டங்கள், நீதிமன்ற நடவடிக்கைகளை, மக்கள் குறைந்த செலவில் எளிதில் அணுகக்கூடியதாக மாற்றியுள்ளன என்று மத்திய உள்துறை அமைச்சா் திரு. அமித் ஷா கூறியுள்ளாா்.

இந்த 3 சட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டு ஓராண்டு நிறைவுறுவதைக் குறிக்கும் வகையில் புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவா், பிரதமா் திரு. நரேந்திர மோடியின் தலைமையிலான மத்திய அரசு, சமூகநீதி, பொருளாதாரம் மற்றும் அரசியல் நீதி அடிப்படையிலான ஆளுகையில் ஒரு பொற்காலத்தை ஏற்படுத்தி உள்ளது என்றாா்.

நாட்டின் குற்றவியல் நீதி நடைமுறை, உண்மையான நீதி வழங்கப்படுகிறது என்ற நம்பிக்கையை மக்களிடையே ஏற்படுத்தும் என்றும் திரு அமித் ஷா குறிப்பிட்டாா்.

<<<<<>>>>>

அமா்நாத் புனித யாத்திரை நாளை தொடங்க உள்ள நிலையில், முகாம்களுக்கு யாத்ரீகர்களை ஜம்மு காஷ்மீர் துணை நிலை ஆளுநர் திரு மனோஜ் சின்ஹா இன்று வழியனுப்பி வைத்தார்.

யாத்திரை செல்லும் முதல் குழுவினரை திரு மனோஜ் சின்ஹா, உயரதிகாரிகள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் முறைப்படி வழியனுப்பி வைத்தனர்.

பஹல்காம் அருகே உள்ள **Nunwan** முகாமிலிருந்தும், பல்தால் முகாமிலிருந்தும் மொத்தம் ஐந்தாயிரத்து 892 யாத்ரீகர்கள் நாளை அமர்நாத் யாத்திரையை தொடங்குகின்றனர்.

<<<<<>>>>>

தமிழகத்தில் கடந்த நான்கு ஆண்டுகளில் 3 ஆயிரத்து 177 கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளதாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

இன்று சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், 7 ஆயிரத்து 650 ஏக்கர் கோயில் நிலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

<<<<<>>>>>

பரமக்குடி - ராமநாதபுரம் தேசிய நெடுஞ்சாலையை நான்கு வழிச்சாலையாக மாற்றுவதென்ற மத்திய அமைச்சரவையின் முடிவு, வரவேற்கத்தக்கது என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இத்திட்டத்தை கொண்டுவந்த பிரதமர் திரு நரேந்திரமோடிக்கு தமது நன்றியை தெரிவிப்பதாகவும் கூறியுள்ளார்.

இந்த புதிய நான்குவழி நெடுஞ்சாலைத் திட்டத்தால் தென் தமிழகத்தின் குறிப்பாக ராமேஸ்வரம் உள்ளிட்ட புனித தலங்களுக்கான சுற்றுலா மற்றும் வர்த்தகம் மேம்படும் என்றும் திரு எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

தமிழகத்தின் திருவள்ளூர் மாவட்டம் பெருமாள்பட்டு ஊராட்சியில், மத்திய அரசின் ஆயுள் காப்பீட்டுத் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி மாவட்ட முன்னோடி வங்கி சார்பில் நடைபெற்றது.

இந்தியன் வங்கியின் மண்டல துணை பொது மேலாளர் திரு சீனிவாஸ், வட்டார வளர்ச்சி அலுவலர் திரு மின்கிராஜ் உள்ளிட்டோர் இதில் கலந்துகொண்டனர்.

இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில், பிரதமரின் ஜீவன் ஜோதி பீமா யோஜனா, சுரக்ஷா பீமா யோஜனா, அடல் பென்ஷன் உள்ளிட்டவை குறித்து எடுத்துரைக்கப்பட்டது தங்களுக்கு உதவிகரமாக இருக்கும் என்று இதில் கலந்துகொண்ட பயனாளிகள் தெரிவித்தனர்.

<<<<<>>>>>

ரஷ்யாவின் **Kupol** எலக்ட்ரோ மெகானிக்கல் ஆலை மீது யுக்ரைன் நடத்திய ட்ரோன் தாக்குதலில் 3 பேர் உயிரிழந்தனர். ஏராளமானோர் காயமடைந்தனர்.

இவர்களில் 10 பேரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து ரஷ்யாவும் யுக்ரைனுக்கு எதிரான தனது தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளது.

<<<<<>>>>>

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி இன்று தொடங்குகிறது.

பர்மிங்ஹாமில் இப்போட்டி பிற்பகல் மணி 3.30-க்கு தொடங்குகிறது.

--------

19 வயதுக்கு உட்பட்டோருக்கான மூன்றாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று இங்கிலாந்தை எதிர்கொள்கிறது.

**Northhampton**-னில் இப்போட்டி பிற்பகல் மணி 3.30-க்கு தொடங்குகிறது.

---------------

ஆசிய கோப்பை மகளிர் கால்பந்து தகுதிச்சுற்று ஆட்டத்தில் இந்தியா இன்று ஈராக்கை எதிர்கொள்கிறது.

தாய்லாந்தில் இப்போட்டி பிற்பகல் மணி 2.30-க்கு தொடங்குகிறது.

--------------

ஆசிய இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் திவ்யான்ஷி **Bhowmick** தங்கப்பதக்கம் வென்றார்.

தாஷ்கண்டில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் இவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

கலப்பு இரட்டையர் பிரிவில் **Ankur -** தனிஷா இணை வெண்கலப்பதக்கம் வென்றது.

-----------

துருக்கியில் நடைபெற்ற சர்வதேச மல்யுத்த போட்டியில் இந்தியா நான்கு தங்கம், ஐந்து வெள்ளி, ஐந்து வெண்கலப்பதக்கங்களை வென்றுள்ளது.

------------

சர்வதேச கிராண்ட் செஸ் போட்டி குரேஷியாவில் இன்று தொடங்குகிறது. முதல் சுற்று ஆட்டத்தில் இநதியாவின் குகேஷ் - உலகின் முதல் நிலை வீரரான நார்வேயின் மெக்னஸ் கார்ல்சனை எதிர்கொள்கிறார்.

**<<<<<>>>>>**